**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – வன்கொடுமைத் தடுப்பு – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு - ஆண்டுதோறும் மாவட்டங்களில் நடத்தப்படும் "சமபந்தி போஜனம்" என்பதை "சமத்துவ விருந்து" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.


---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு 1)துறை**

**அரசாணை (நிலை) எண்: 34**

**நாள் :02.05.2022**
**சுபகிருது சித்திரை 19ம் நாள்**
**திருவள்ளுவராண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண். 591, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.1990
2. செய்தி வெளியீடு எண். 590, நாள் 12.04.2022.

---

**ஆணை:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் தொடர்பாக நடைபெற்ற மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையில்,

> ஆகஸ்ட் 15 விடுதலை நாள் உள்ளிட்ட முக்கிய நாட்களில் இதுவரை நடைபெற்று வந்த "சமபந்தி போஜனம்" என்பதை இனிமேல் "சமத்துவ விருந்து" என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை இந்த கூட்டத்தின் மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

என மேலே 2-இல் படிக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இதனை கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும்

இதுவரை நடைபெற்று வந்த "சமபந்தி போஜனம்" என்பதை இனிமேல் "சமத்துவ விருந்து" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை . 600 005.
கூடுதல் காவல் துறை இயக்குநர்,
சமூக நீதி மற்றும் மனித உரிமைகள், சென்னை – 600 004.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம)பழங்குடியினர் நல அலுவலர்கள்.

**நகல்**

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
சென்னை-600 009.
இருப்பு கோப்பு/உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

தேர்வு நிலை பிரிவு அலுவலர்